2017 ஜுன் 16]

நிலையங்கள் துவங்குவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆராய்ச்சி நிலையங்களை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***4539**—**திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, மாதவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் கட்ட ரூ.202 இலட்சம் ஒதுக்கீடு செய்து, பொதுப் பணித் துறைக்கு அனுமதியளிக்கப்பட்டு, கட்டடம் கட்ட டெண்டர் விடப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்ததாரர் ஒருவாரத்தில் அந்தக் கட்டடப் பணியைத் தொடங்கி, 31–3–2018 அதாவது, 9 மாத காலத்தில் இப்பணி நிறைவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பணியில் வைர விழா காணும் தலைவர் கலைஞர் அவர்களால், மாண்புமிகு எதிர்க்கட்சித்*

தலைவர் அவர்கள் துணை முதல்வராக இருந்தபோது, 23–12–2009 அன்றே மாதவரம் வட்டாட்சியர் அலுவலகம் உருவாக்கப்பட்டது. ஆனால், இதுநாள்வரை அந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. தற்போது அந்தக் கட்டடத்திற்கு பார்க்கப்பட்டிருக்கும் புதிய இடம் போக்குவரத்து வசதியில்லாத தனிமையான இடமாகும். மேலும், 7 மீட்டர் அகலம் கொண்ட சாலை என்பதாலும், ஆயிரக்கணக்கான மக்கள் போய் சேருவதற்கான அல்லது போக்குவரத்துக்கு வசதியில்லாத இடம் என்ற காரணத்தாலும், அந்தப் பகுதி மக்களால் ஏற்கெனவே இதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு, வேறு இடத்திலே இந்த தாசில்தார் அலுவலகத்தைத் கட்டித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குண்டான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆகவே, அந்த இடத்திற்கு போக்குவரத்து வசதி செய்து தர வேண்டும்.

அதேநேரத்தில், அம்பத்தூர் கோட்டாட்சியருக்கு நான்கு தாலுகாகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாதவரம், திருவொற்றியூர், மதுரவாயல் மற்றும் அம்பத்தூர் ஆகிய நான்கு பகுதிகளில் சுமார் 22 இலட்சம் பேர் வசிக்கின்றார்கள். அந்த நான்கு தாலுகாவிற்கும் ஒரே வருவாய்க் கோட்டாட்சியர் இருப்பதால், பணிச்சுமை காரணமாக பல பணிகள் தேங்கிக் கிடக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, மாதவரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, முதலிலே தேர்வு செய்த இடமான சர்வே எண்கள் 239, 244 மற்றும் 245, மாதவரம் பால் பண்ணைக்காக கையகப்படுத்தப்பட்ட இடமாகும். அந்த இடம் சம்பந்தமாக தனிநபரால் வழக்குத் தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தால், 2013–ல் இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டது. இந்த வழக்கு தாவாவில் இருந்த காரணத்தால், மாற்று இடம் அடையாளம் காண்பதற்காக சர்வே

எண் 4/1, 990 என்கிற நிலம் இன்றைக்கு அடையாளம் காணப்பட்டு, ஒத்தக்கருத்து ஏற்பட்டதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் அவர்களால் முன் நுழைவு அனுமதி, அதாவது enter upon permission வழங்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற புதிய இடத்திலேதான் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடப் பணி அமைகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய கோட்டம் உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள் இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு அது எடுத்துச் செல்லப்படும். 70 புதிய வட்டங்களையும், 9 புதிய கோட்டங்களையும் உருவாக்கித் தந்திருக்கிற ஒரே அரசு இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் கனிவோடு பரிசிலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிவரும் வட்டாட்சியர் அலுவலகத்திலே சமூக பாதுகாப்புப் பிரிவிலே இதுவரை தாசில்தார் பணியிடம் நியமிக்கப்படவில்லை. தேர்தல் பணி பார்க்க வட்டாட்சியர் பணி நியமனம் செய்யப்படவில்லை. தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பணியிடம் காலியாக இருக்கின்றது. தாலுகாவில் இருக்கின்ற 11 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களில் 5 கிராம நிருவாக அலுவலர்கள்தான் பணியில் இருக்கிறார்கள். அதிலும் ஒருவர் இந்த மாதம் பணி ஓய்வு பெறுகிறார். 4 கிராம நிருவாக அலுவலர்கள்தான் பணியில் இருக்கிறார்கள். 3 இடங்களிலே Village Assistants இல்லை. தாலுகாவில் ஏற்கெனவே இயங்கிவந்த 4 இ–சேவை மையங்களில் 2 இ–சேவை மையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதேநேரத்திலே கருவூலம் 1–4–2017

முதல் இயங்க ஆரம்பித்திருக்கிறது. கருவூலத்திற்குத் தேவையான அதிகாரிகள் இல்லை. என்னுடைய தொகுதிக்குட்பட்ட மோரை, வெள்ளானூர் மற்றும் பாடியநல்லூர் ஊராட்சிகளில் எல்லாம் இ-சேவை மையங்கள் இல்லாமல் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இவற்றை இந்த அரசு செய்து தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் கட்டுவது தொடர்பான கேள்வி கேட்டுவிட்டு, அதைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கருவூலங்கள் தொடர்பாக நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அதற்குரிய தகவல்களைத் தருவார்கள். வட்டாட்சியர் பதவியிலே காலிப் பணியிடங்கள் உருவாகுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். காலிப் பணியிடங்களையெல்லாம் போர்க்கால அடிப்படையில் நிரப்புவதற்குத் தேவையான ஆய்வுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்டு, காலிப் பணியிடங்களை நிரப்ப உரிய அறிவுரைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கியுள்ளது. காலிப் பணியிடங்களை நிரப்பக்கூடிய நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வருவாய் வட்ட அலுவலகம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாகக் கட்டப்பட்ட மிகவும் பழமையான அலுவலகம். 125 வருவாய் கிராமங்களுக்கான தலைமையிட அலுவலகமாக உள்ளது. இந்த அலுவலகம் இட நெருக்கடியில் இயங்கி வருகிறது. தற்போது புதிய அலுவலகக்

2017 ஜூன் 16]

கட்டடம் கட்டுவதற்கான அரசாணை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அவ்வாறு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான அரசாணை வழங்கப்பட்டிருந்தால், கும்பகோணம் தொகுதி மக்கள் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணியை விரைவுபடுத்தி செயல்படுத்துவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாவட்ட நிருவாகத்திலே, வருவாய் நிருவாகத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதன் அடிப்படையிலே, பணிச் சூழலை மேம்படுத்தும் பொருட்டும், பொதுமக்கள் எளிதாக அணுகி வருவாய்த் துறையின் சேவையைப் பெறும் வகையிலும் வருவாய்த் துறைக்குத் தேவைப்படும் அலுவலகக் கட்டடங்கள், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை முன் எப்போதும் இல்லாத அளவிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முக்கியத்துவம் அளித்து உருவாக்கி வருகிறது. அந்த வகையிலே கடந்த ஆறு ஆண்டுகளிலே 8,498 கட்டடங்கள் 513 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கித் தந்திருக்கிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வாடகைக் கட்டடங்களிலும், பழமையான கட்டடங்களிலும் இயங்கிவரும் அனைத்து வருவாய்த் துறை அலுவலகக் கட்டடங்களையும் ஆய்வு செய்து, புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு, மிக விரைவாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கட்டடப் பணியையும் மிகவும் விரைவாக செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*